**உதவி அமர்வு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்**

**முன்னிலை : திரு.சி. ஜெயப்பிரகாஷ், எம்.காம்., எம்.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி, ஒட்டன்சத்திரம்.**

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாள் புதன்கிழமை.

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 19-ம் நாள்

**பல்வகை குற்ற மனுஎண்.01/2025**

**in**

**அமர்வு வழக்கு எண்.203/2024**

1. ரவிக்குமார்,
2. மணிகண்டன் .... மனுதாரர்கள்/1,2 குற்றம் சாட்டப்பட்டவர்கள்

/எதிர்/

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

அம்பிளிக்கை காவல் நிலையம்

குற்ற எண்.73/2022

சட்டப்பிரிவு 294(b), 342, 307 r/w.34 இ.த.ச ...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இந்த பல்வகை குற்றவியல் மனுவானது மனுதாரர்/1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர். முருகானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.ஆர். செந்தில் அவர்கள் முன்னிலையாகியும், என் முன்பாக 05.11.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்து, இருதரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டும், இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

I. மனுதாரர்/1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் சாட்சியை மறுவிசாரணைக்கு அழைக்கக் கோரி பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 பிரிவு 348 ன்படி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

II. மனுதாரர்/1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதுரையில், இந்நீதிமன்றத்தில் சாட்சி விசாரணை தொடங்கப்பட்டு அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11, அ.சா.12, அ.சா. 13 சாட்சிகள் முதல் விசாரணை செய்யப்பட்டிருந்த நாட்களில் 1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர் தவிர்க்க முடியாத காரணத்தினால் வெளியூர் நீதிமன்ற விசாரணைக்கு சென்றுவிட்டபடியால் அரசு தரப்பு சாட்சிகளை அன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், இவ்வழக்கில் மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தால் தான் 1,2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கினை நிரூபணம் செய்ய இயலும் என்றும், சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு மீண்டும் வரவழைக்க சமூகம் நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் சாட்சிகளுக்கு உரிய படித்தொகை வழங்கவும், நிபந்தனைகளுக்கு உட்படவும் 1,2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் தயாராக உள்ளதாகவும், எனவே, இவ்வழக்கில் அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11,12,13 ஆகிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்தவற்கு சமூகம் நீதிமன்றம் உத்தரவிட வேண்டி மனுதாரர்/1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வாதிட்டார்.

III. அரசு தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் தமது வாதத்தில், இந்நீதிமன்ற அமர்வு வழக்கு எண்.203/2024 வழக்கில் சாட்சிகள் அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11, அ.சா.12, அ.சா.13 ஆகிய சாட்சிகள் மாண்பமை நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ள நாட்களில் 1,2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்றும், அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11, அ.சா.12, அ.சா.13 ஆகிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு சாட்சிகளுக்கு படித்தொகை பெற்றுத்தறுமாறு அரசு தரப்பில் தெரிவித்துள்ளார்.

IV. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

இவ்வழக்கில் சாட்சி விசாரணை தொடங்கப்பட்டு, கடந்த 03.03.2025 அன்று பட்டியல் சாட்சி 1 ஆன பெருமாள் என்பவர் அ.சா.1 ஆகவும், பட்டியல் சாட்சி 3 ஆன கண்ணம்மாள் என்பவர் அ.சா.3 ஆகவும், பட்டியல் சாட்சி 4 ஆன நவீன் என்பவர் அ.சா.4 ஆகவும், பட்டியல் சாட்சி 5 ஆன நிர்மல் என்பவர் அ.சா.5 ஆகவும், பட்டியல் சாட்சி 6 ஆன செல்வக்குமார் என்பவர் அ.சா.6 ஆகவும், பட்டியல் சாட்சி 7 ஆன பால்ராஜ் என்பவர் அ.சா.7 ஆகவும், பட்டியல் சாட்சி 10 ஆன பழனிச்சாமி என்பவர் அ.சா.8 ஆகவும், கடந்த 07.04.2025 அன்று பட்டியல் சாட்சி 9 ஆன சுப்பிரமணி என்பவர் அ.சா.11 ஆகவும், கடந்த 07.07.2025 அன்று பட்டியல் சாட்சி 12 ஆன சவடமுத்து என்பவர் அ.சா.12 ஆகவும், கடந்த 28.07.2025 அன்று பட்டியல் சாட்சி 13 ஆன வெங்கடாஜலபதி என்பவர் அ.சா.13 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11, அ.சா.12, அ.சா.13 சாட்சிகள் விசாரிக்கப்பட்ட அன்றைய தினம் 1,2 குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும், குறுக்கு விசாரணை இல்லை என்றும் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 1,2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மீண்டும் அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11, அ.சா.12, அ.சா.13 ஆகிய சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் அழைக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதைப் பரிசீலனை செய்கையில், இந்த குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கை திறம்பட நடத்த ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாகிறது. இருப்பினும், சாட்சிகள் ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் சாட்சியம் முன்னிலைப்படுத்தியிருக்கக் கூடிய நிலையில், மீண்டும் நீதிமன்றத்திற்கு வரும் பட்சத்தில் தேவையற்ற காலவிரயம் சாட்சிகளுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கால விரயத்தை கருத்தில் கொண்டு ஒரு கணிசமான செலவுத் தொகையினை இந்த குற்றம் சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளுக்கு வழங்கும் பட்சத்தில் இம்மனுவை அனுமதிப்பதே சரியானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

V. இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்பட்டு, அ.சா.1, அ.சா.3 முதல் அ.சா.8, அ.சா.11, அ.சா.12, அ.சா.13 ஒவ்வொருவருக்கும் தலா ரூ.500/- சாட்சிப்படியாக மனுதாரர்கள்/1,2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் எதிர்வரும் 24.11.2025 ம் தேதிக்குள் வைப்பீடு செய்ய உத்தரவிடப்படுகிறது. தவறும் பட்சத்தில், இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கப்பட்டு, இன்று 2025 ஆம் வருடம் நவம்பர் மாதம் 05 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.05 18:33:58 +0530

உதவி அமர்வு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

நகல்

01. கூடுதல் அரசு வழக்கறிஞர், ஒட்டன்சத்திரம்

02. காவல் ஆய்வாளர், அம்பிளிக்கை காவல் நிலையம், அம்பிளிக்கை